Article Date	Headline / Summary	Publication
09 Oct 2026	Long-term third-party insurance to prevent financial loss... Why is it mandatory?	Nanayam Vikatan(Tamil)

நீண்டகால பாலிசிகள்!

இருசக்கர வாகனங்களுக்கு மூன்றாம் தரப்புக் காப்பீட்டின் காலத்தை ஆறு ஆண்டுகளாகவும், நான்கு சக்கர வாகனங்களுக்கு நான்கு ஆண்டுகளாகவும் நீட்டிக்க வேண்டும் என்று இந்த ஆலோசனை பரிந்துரைக் கிறது. இந்த நீட்டிப்பு என்பது வெறுமனே நீண்டகால காப்பீட்டைப் பற்றியது மட்டுமல்ல. இது காப்பீட்டுப் பாதுகாப்பின் தொடர்ச்சியை உறுதி செய்கிறது, காப்பீடு இல்லாத வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறது மற்றும் விபத்தில் பாதிக்கப்படும் நபர்களுக்கு நிதி ஆதரவு கிடைப்பதற்கும் உதவுகிறது.

இந்தியாவில் வாகன உரிமையாளர் களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகிறது. அந்த வளர்ச்சிக்கு ஏற்ப காப்பீட்டுப் பாதுகாப்பும் விரிவடைவது மிகவும் அவசியம். இதுபோன்ற நடவடிக்கைகள் சாலை விபத்துகளால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஆதரவளிக்கும் நிதி அமைப்பை வலுப்படுத்துவதோடு, ஒரு வாகனத்தின் பயன்பாட்டுக் காலத்தின் தொடக்கத்திலிருந்தே நீண்டகால சட்டப்பூர்வ இணக்கத்தை ஊக்குவிக்கின்றன.

விபத்தில் பாதிக்கப்படும் நபர்களுக்கு, இதன் மூலம் இழப்பீடு பெறுவதற்கான வாய்ப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படலாம். அதைவிட முக்கியமாக, காப்பீடு என்பது வாகனம் வாங்கும் நேரத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய ஒரு சட்டப்பூர்வ கடமை மட்டுமல்ல; நமது சாலைகளில் பொறுப்பான பயணத்திற்கும், நிதிப் பொறுப்புணர்விற்கும் அடிப்படையான ஒரு முக்கிய தூணாகும் என்ற கருத்தை இது வலுப்படுத்துகிறது.

நீண்டகால மூன்றாம் தரப்பு காப்பீட்டின் நன்மைகள்!

இந்தியாவில் நீங்கள் ஒரு மோட்டார் வாகனத்தை வைத்திருந்தால், மோட்டார் வாகனச் சட்டம், 1988-ன் கீழ் மூன்றாம் தரப்பு மோட்டார் காப்பீடு (Third Party Motor insurance) எடுத்திருப்பது கட்டாயம். இந்தக் காப்பீடு, சட்டப்படியான காப்பீடு என்றும் அழைக்கப்படுகிறது. இது வெறும் சட்டப்பூர்வ தேவையாக மட்டுமல்லாமல், காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் மூலம் மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் உடல் காயம், உயிரிழப்பு அல்லது சொத்து சேதம் தொடர்பான சட்டப்பூர்வ பொறுப்பிலிருந்து வாகன உரிமையாளர்களைப் பாதுகாக்கும் ஒரு சட்டப்பூர்வ காப்பீடாகவும் செயல்படுகிறது.

சமீபத்திய நாடாளுமன்ற அறிக்கையின்படி (மார்ச் 2026 நிலவரப்படி) VAHAN தரவுத்தளத்தில் உள்ள வாகனங்களின் பதிவு நிலையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது, இந்தியச் சாலைகளில் தற்போது இயங்கும் வாகனங்களில் கிட்டத்தட்ட 45% வாகனங்களுக்கு காப்பீடு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, அனைவருக்கும் நிதிப் பொறுப்புணர்வையும் பாதுகாப்பான சாலைகளையும் உறுதி செய்வதற்காக, கடுமையான சட்ட அமலாக்கமும் அதிகமான விழிப்புணர்வும் அவசர மாகத் தேவை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மூன்றாம் தரப்புக் காப்பீட்டு விதிமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை சமீபத்திய உச்ச நீதிமன்ற ஆலோசனையும் வலியுறுத்தி யுள்ளது. இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்குக் கட்டாயமான மூன்றாம் தரப்புக் காப்பீட்டை முறையாகப் பின்பற்றவேண்டிய அவசியத்தை இந்த ஆலோசனை எடுத்துரைக்கிறது.

நீண்டகால மூன்றாம் தரப்புக் காப்பீட்டுக் கொள்கை வாகன உரிமையாளர்களுக்கு பல நன்மைகளை வழங்குகிறது. காப்பீட்டுக் காலம் முழுவதும் எதிர்கால பிரீமியம் மாற்றங்கள் குறித்த நிச்சயமற்ற தன்மையிலிருந்து இது பாதுகாப்பளிக்கிறது. பணவீக்கம் மற்றும் அதிகரிக்கும் காப்பீட்டுக் கோரிக்கைகள் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் ஏற்படக்கூடிய பிரீமியம் உயர்வுகளிலிருந்தும் இது ஓரளவு பாதுகாப்பை வழங்குகிறது.

ஒவ்வோர் ஆண்டும் காப்பீட்டைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லாததால், கூடுதல் நிர்வாகச் செலவுகளையும் தவிர்க்க முடியும். இதனால் நீண்ட காலத்தில் இந்தக் காப்பீடு பொருளாதார ரீதியாகவும் பயனுள்ளதாக அமைகிறது.

நீண்டகால காப்பீட்டின் வசதி மற்றொரு முக்கியமான நன்மை... ஒரே ஒரு காப்பீட்டு பாலிசி நீண்ட காலத்துக்கு அமலில் இருப்பதால், ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கும் தேதியை நினைவில் வைத்திருக்க வேண்டியதில்லை. காப்பீடு காலாவதியாகிவிடுமோ என்ற கவலையும் தேவையில்லை. ஆண்டுதோறும் ஒரே மாதிரியான ஆவண நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் குறைகிறது.

இதன் மூலம் காப்பீட்டு நிர்வாகம் மிகவும் எளிதாகிறது மற்றும் கூடுதல் முயற்சியின்றி தொடர்ச்சி யான சட்டப்பூர்வ இணக்கத்தை உறுதி செய்ய முடிகிறது.

மொத்தத்தில், நீண்டகால மூன்றாம் தரப்பு காப்பீடு செலவுச் சிக்கனம், நீண்டகால பாதுகாப்பு மற்றும் எளிதான நிர்வாகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவதால், வாகன உரிமையாளர்களுக்கு ஒரு நடைமுறை மற்றும் நம்பகமான தேர்வாக அமைகிறது.

மூன்றாம் தரப்பு காப்பீட்டை தெளிவாகப் புரிந்து கொள்வோம். மூன்றாம் தரப்பு காப்பீட்டு ஒப்பந்தத்தில் மூன்று தனித்துவமான தரப்பினர் இடம்பெறுகின்றனர்.முதல் தரப்பினர் காப்பீட்டுதாரர் ஆவார். அவருடைய பெயர் காப்பீட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.இரண்டாவது தரப்பினர், அந்தக் காப்பீட்டு பாலிசியை வழங்கும் காப்பீட்டு நிறுவனம். மூன்றாவது தரப்பினர் என்பது காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தால் இழப்பு அல்லது சேதத்தைச் சந்திக்கும் நபர் அல்லது சொத்தைக் குறிக்கிறது. அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கான பொறுப்பு மோட்டார் வாகனச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் காப்பீட்டால் பாதுகாக்கப்படுகிறது.

எதிர்பாராத நிலையில் சில லட்சம் ரூபாயிலிருந்து பல கோடி ரூபாய் வரை எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். கடுமையான நிதிச் சுமையைத் தவிர்க்க மூன்றாம் தரப்புக் காப்பீடு மிகவும் முக்கியமானது. ஆனால், மூன்றாம் தரப்புக் காப்பீடு, காப்பீட்டுதாரரின் சொந்த வாகனத்துகு ஏற்படும் சேதத்தை ஈடுகட்டாது. சொந்த வாகனத்துக்கும் பாதுகாப்பு வேண்டும் என்றால், ஓன் டேமேஜ் கவர் (Own Damage Cover) உள்ளிட்ட முழுமையான காப்பீட்டு பாலிசியை
(Comprehensive Insurance Cover) எடுக்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு நபரிடம் மூன்றாம் தரப்பு காப்பீடு மட்டுமே உள்ளது என்று வைத்துக்கொள்வோம். அவர் ஓட்டிச்செல்லும் கார் ஓர் இருசக்கர வாகனத்துடன் மோதி விபத்து ஏற்படுகிறது. அந்த இருசக்கர வாகன ஓட்டுநர் காயமடைகிறார், மேலும் இருசக்கர வாகனமும் சேதமடைகிறது. இந்த விபத்துக்காக கார் உரிமையாளர் ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டால், அந்தத் தொகையை மூன்றாம் தரப்புக் காப்பீடு ஈடுகட்டும்.

ஆனால், விபத்தினால் காருக்கு சேதம் ஏற்பட்டால் அதைச் சரி செய்வதற்கான செலவை இந்தக் காப்பீடு வழங்காது. ஒருவரின் சொந்த வாகனத்துக்கு ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழி,

அமர்நாத் சக்சேனா
முதன்மை தொழில்நுட்ப அதிகாரி – வணிகப் பிரிவு,
பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்



மூன்றாம் தரப்புக் காப்பீடு எதற்கெல்லாம் பாதுகாப்பு வழங்குகிறது?

மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் உயிரிழப்பு அல்லது உடல் காயம் தொடர்பான சட்டப்பூர்வ பொறுப்புகளுக்கு பாதுகாப்பு வழங்குகிறது. மூன்றாம் தரப்பினரின் சொத்துகளுக்கு ஏற்படும் சேதங்களுக்கு, சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டு பாதுகாப்பு வழங்குகிறது.

மூன்றாம் தரப்பு காப்பீடு, குறைந்த செலவில் காப்பீட்டுதாரருக்கு முக்கியமான பாதுகாப்பை வழங்குகிறது. இந்தியாவில் கிடைக்கும் மிகவும் மலிவான காப்பீட்டு பாதுகாப்புகளில் இதுவும் ஒன்று. இதன் பிரீமியம் விகிதங்கள் இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

இந்தக் காப்பீடு எளிமையானது மற்றும் வாங்குவதற்கும் வசதியானது. பல்வேறு அம்சங்களை மிகவும் விரிவாக ஆய்வு செய்யவேண்டிய அவசியம் குறைவாக உள்ளது. காப்பீட்டு நிறுவனத்தின் இணையதளம் அல்லது மொபைல் செயலி மூலம் விரைவாகக் காப்பீட்டு பாலிசியை வாங்க முடியும்.

இந்தியாவில் வாகன உரிமையாளர் களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், நிதிப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், அர்த்தமுள்ள காப்பீட்டுப் பாதுகாப்பை விரிவுபடுத்தவும் காப்பீட்டுத் துறையும் அதற்கேற்ப வளர வேண்டும்.

செல்லுபடியாகும் காப்பீட்டுடன், ஒவ்வொரு ஓட்டுநரும் முறையான ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும். வணிக வாகனங்களுக்கு தேவையான அனுமதிகளும் இருக்க வேண்டும். மேலும், அனைவரும் போக்குவரத்து விதிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகள் தனிநபர்களின் பாதுகாப்பை மட்டு மல்லாமல், சாலைகளைப் பயன் படுத்தும் அனைவரின் பாதுகாப்பையும் நலனையும் உறுதி செய்ய உதவும்.

அமர்நாத் சக்சேனா
முதன்மை தொழில்நுட்ப அதிகாரி – வணிகப் பிரிவு, பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்

பண இழப்பைத் தடுக்கும் நீண்டகால மூன்றாம் தரப்புக் காப்பீடு... ஏன் கட்டாயம்?



காப்பீடு